DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 406/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW1 (LW1)
Defence

Name : Radha

Father Name /
Husband Name : Jeevarathinam

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 7th April 2026.

எதிரி ஆஜர்.

சாட்சியை ஆரோவில் காவல் நிலைய த.காவலர் திருமதி.மதியழகி என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

முதண்மை விசாரணை

நான் ஊசட்டேரி அருகே ராதா வுட் வெர்க் என்ற பெயரில் மரக்கடை நடத்தி வருகிறேன். 18.01.2025 அன்று மாலை 06.00 மணிக்கு நான் எனது மேற்படி கடையை பூட்டிவிட்டு பக்கத்தில் உள்ள இடத்தில் எனக்க

சொந்தமான இரண்டு தேக்கு மர ஷோபாவை சங்கிலியால் கட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை 06.00 மணிக்கு வந்து பார்த்தபோது மேற்படி 2 ஷோபாக்களை காணவில்லை. யாரோ திருடி சென்றுவிட்டார்கள். மேற்படி ஷோபாக்களின் மதிப்பு சுமார் ரூ-45,000/- ஆகும். நானும் எனது கணவரும் பல இடத்தில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. யார் மேற்படி ஷோபாக்களை திருடி சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக ஆரோவில் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகார் **அசா.ஆ.1 ஆகும்**. மேற்படி திருடு போன ஷோபாக்கள் கிடைத்து விட்டதாக போலீசார் சொன்னதன்பேரில் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இடைக்காலமாக மேற்படி ஷோபாக்களை பெற்று சென்றேன். மேற்படி ஷோபாக்களின் சிடியுடன் கூடிய 3 புகைப்படங்கள் **அசா.பொ.1 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

யார் மேற்படி ஷோபாக்களை திருடி சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.406 /2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW2 (LW4)
Defence

Name : Surya

Father Name /
Husband Name : Karthikeyan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 7th April 2026.

எதிரி ஆஜர்.

சாட்சியை ஆரோவில் காவல் நிலைய த.காவலர் திருமதி.மதியழகி என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

முதண்மை விசாரணை

நான் வாழப்பட்டாம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டராக வேலை செய்துவருகிறேன். சாட்சி முருகனை தெரியும். என்னிடம்

காட்டபப்டும் பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் எனது கையொப்பம் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதியளித்ததின் பேரில் தற்போது சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆஜர் எதிரியை தெரியாது. போலீசார் விசாரணையில் 23.01.2025 பகல் 12.00 மணிக்கு நானும் முருகனும் ராதா வுட் வொர்க்ஸ் கடை அருகே இருந்தபோது ஆரோவில் காவல் நிலையத்தார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் செய்தர்கள் என்றும் அதில் நானும் முருகனும் கையொப்பம் செய்தோம் என்றும் பின்பு அன்றையதினம் 14.15 மணிக்கு எங்கள் முன்னிலையில் எதிரி மீன்சேகர் என்பவரை அவர் வீட்டில் வைத்து விசாரிக்க அவர் எவ்வித அச்சுறத்தலும் துன்புறுத்தலும் ஆசைவார்த்தையும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் அன்றைய தினம் 15.30 மணிக்கு எதிரி வீட்டில் இருந்து எடுத்து படுத்திய 2 தேக்கு ஜோபாக்களை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினர் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.406/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW3 (LW5)
Defence

Name : Murugan

Father Name /
Husband Name : Ranganathan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 7th April 2026.

எதிரி ஆஜர்.

சாட்சியை ஆரோவில் காவல் நிலைய த.காவலர் திருமதி.மதியழகி என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

முதண்மை விசாரணை

நான் வாழப்பட்டாம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வெர்க் ஷாப் வைத்து வேலை செய்துவருகிறேன். அசா.2 ஐ தெரியும். என்னிடம்

காட்டபப்டும் பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் எனது கையொப்பம் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதியளித்ததின் பேரில் தற்போது சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆஜர் எதிரியை தெரியாது. போலீசார் விசாரணையில் 23.01.2025 பகல் 12.00 மணிக்கு நானும் சூரியாவும் ராதா வுட் வொர்க்ஸ் கடை அருகே இருந்தபோது ஆரோவில் காவல் நிலையத்தார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் செய்தர்கள் என்றும் அதில் நானும் சூரியாவும் கையொப்பம் செய்தோம் என்றும் பின்பு அன்றையதினம் 14.15 மணிக்கு எங்கள் முன்னிலையில் எதிரி மீன்சேகர் என்பவரை அவர் வீட்டில் வைத்து விசாரிக்க அவர் எவ்வித அச்சுறத்தலும் துன்புறுத்தலும் ஆசைவார்த்தையும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் அன்றைய தினம் 15.30 மணிக்கு எதிரி வீட்டில் இருந்து எடுத்து படுத்திய 2 தேக்கு ஷோபாக்களை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினர் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Sd/- XXXX,

நீதித்துறை நடுவர்,

வானூர்.